# மாவட்ட நீதிமன்றம், நாகப்பட்டினம்

**அசல் வழக்கு எண். 67/2022**

**நாள்: 05.08.2026**

**பெயர் : மகேந்திரன்**
**தந்தை/கணவர் பெயர்: பக்கிரிசாமி**
**DW: 2**

**(சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரிக்கப்பட்டது)**

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. வாதி பாக பிரிவினை கேட்டு வழக்கு போட்டுள்ளார். கடந்த 2009ல் எந்த தேதி எந்த மாதம் வீரம்மாள் வீட்டிற்கு போனேன் என்று பிரமான வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். அது எனக்கு நினைவு இல்லை. வீரம்மாள் படிப்பு அறிவு இல்லாதவர் என்றால் சரிதான். செட்டில்மண்ட் எழுத ராஜராம் ஏற்பாடு செய்தார் என்றால் இல்லை. வீரம்மாள் செய்தார். எழுதும் போது நான் உடன் இல்லை. நான் சாட்சி மட்டும் போட்டுள்ளேன் என்றால் சரிதான்.
2. 1ம் பிரதிவாதியுடன் நான் நல்ல உறவு முறையில் இருக்கிறேன் என்றால் சரிதான். சாட்சி சொல்ல நீதிமன்ற அழைப்பாணை வரவில்லை 1ம் பிரதிவாதி தான் என்னை அழைத்தார் என்றால் சரிதான். வீரம்மாளுக்கு பி.சா.ஆ.1 செட்டில்மண்ட் பத்திரம் எழுதி கொடுக்க உரிமை இல்லை என்றும், ராஜராம் மோசடியாக ஏற்படுத்திய செட்டில்மண்ட் ஆவணத்தில் அவருக்கு உடன்ந்தையாக இருந்து நான் சாட்சியாக கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. செட்டில்மண்ட் ஆவணம் ஏற்பட்ட விவரம் வீரம்மாளுக்கு தெரியாது என்றால் சரியல்ல. ராஜராமுடன்

**நான் ராசியாக உள்ளதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.**

**மறுவிசாரணை** – இல்லை.

**ஒப்பம்/-மகேந்திரன்**

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒப்பம்/– T.H. Mohammed Farooq,
மாவட்ட/அமர்வு நீதிபதி,
நாகப்பட்டினம்.